Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam



With the Blessings of His Holiness, Srimath Andavan
Sri Ranga Ramanuja Maha Desikan
of Srirangam Srimath Andavan Asramam

Recitation Material for Paduka Thiruvaradhanam

Divya Prabhandham

Website: www.ramanujamission.org

Table of Contents

Page No.

Source Acknowledgements: Our Sincere Thanks to Sri. Ahobila Muth, USA (www.ahobilamutt.org)

Sriramajayam

Srimathe Sriranga Ramanuja MahaDesikaaya namaha

श्रीमते श्रीरङ्गरामानुज महादेशिकाय नमः
श्रीमते श्रीनिवासरामानुज महादेशिकाय नमः
श्रीमते श्रीवेदान्तरामानुज महादेशिकाय नमः

பொது தனியன்கள்

ராமானுஜ தயாபாத்ரம் ஜ்ஞான வைராக்ய பூஷணம்!
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்!!

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப் ப்ரணவம் வந்தே ரம்ய ஜாமத்ரும் முனிம்

லக்ஷ்மி நாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
அச்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்

யோ நித்யம் அச்யுத பஜாம் புஜ யுக்ம ருக்ம
வ்யாமோகதஸ் ததிதராணி த்ருணய மேநே
அச்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமானுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
சர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபி ராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா

பூதம் ஸரஶ்ச மகதாஹ்வய பட்ட நாத
ஸ்ரீ பக்தி ஸார குலசேகர யோகி வாஹாந்
பக்தாங்க்ரி ரேணு பரகால யதீந்த்ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶ முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழிகளின் தனியன்கள்

நாதமுனிகள் அருளிச் செய்தது

குருமுக மனதீத்ய ப்ராஹ வேதான ஶேஷாந்
நரபதி பரிக்லுப்தம் ஶுல்க மாதாது காம:
ஶ்வஶுர மமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம்தம் விஷ்ணுசித்தம் நமாமி||

பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை
இருவிகற்ப நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்*
சொன்னார் கழற்கமலம் சூடினோம்* – முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்,* கீழ்மையினிற்சேரும்–
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்று*
ஈண்டியசங்கம் எடுத்தூத* – வேண்டிய
வேதங்களோதி விரைந்துகிழியறுத்தான்*
பாதங்கள்யாமுடையபற்று.

1:##
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
பலகோடி நூறாயிரம்*
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!* உன்–
சேவடி செவ்வி திருக்காப்பு. (2)

2:##
அடியோமோடும்நின்னோடும்* பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு*
வடிவாய் நின்வல மார்பினில் *வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும்* சுடராழியும் பல்லாண்டு*
படைபோர் புக்கு முழங்கும்* அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே. (2)

3:
வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் *வந்து மண்ணும் மணமும் கொண்மின்*
கூழாட்பட்டு நின்றீர்களை* எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்*
ஏழாட்காலும் பழிப்பிலோம்* நாங்கள் இராக்கதர்வாழ்* இலங்கை–
பாழாளாகப் படை பொருதானுக்குப்* பல்லாண்டு கூறுதமே.

4:
ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து * எங்கள் குழாம் புகுந்து*
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி* வந்துஒல்லைக்கூடுமினோ*
நாடும் நகரமும் நன்கறிய* நமோ நாராயணாயவென்று*
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!* வந்து பல்லாண்டு கூறுமினே.

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

5:
அண்டக்குலத்துக்கு அதிபதியாகி* அசுரர் இராக்கதரை*
இண்டைக்குலத்தை எடுத்துக்களைந்த* இருடீகேசன்தனக்கு*
தொண்டக்குலத்திலுள்ளீர்!* வந்தடிதொழுது ஆயிரநாமம்சொல்லி*
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து* பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே.

6:
எந்தை தந்தை தந்தை தந்தைதன் மூத்தப்பன் *ஏழ்படி கால்தொடங்கி*
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்* திருவோணத் திருவிழவில்*
அந்தியம்போதில் அரியுருவாகி* அரியை அழித்தவனை*
பந்தனை தீரப் பல்லாண்டு* பல்லாயிரத்தாண்டென்று பாடுதமே.

7:
தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி* திகழ் திருச்சக்கரத்தின்*
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று* குடிகுடி ஆட்செய்கின்றோம்*
மாயப் பொருபடை வாணனை* ஆயிரந்தோளும் பொழிகுருதி–
பாய * சுழற்றிய ஆழி வல்லானுக்குப்* பல்லாண்டு கூறுதுமே.

8:
நெய்யிடை நல்லதோர் சோறும்* நியதமும் அத்தாணிச் சேவகமும்*
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு * காதுக்குக் குண்டலமும்*
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து *என்னை வெள்ளுயிராக்க வல்ல*
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்* பல்லாண்டு கூறுவனே.

9:
உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்துக்* கலத்ததுண்டு*
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன* சூடும் இத்தொண்டர்களோம்*
விடுத்த திசைக்கருமம் திருத்தித்* திருவோணத் திருவிழவில்*
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்* பல்லாண்டு கூறுதுமே.

10:
எந்நாள்எம்பெருமான் *உன்தனக்கு அடியோமென்று எழுத்துப்பட்ட–
அந்நாளே *அடியோங்கள் அடிக்குடில்* வீடுபெற்று உய்ந்ததுகாண்*
செந்நாள் தோற்றித்* திருமதுரையுள் சிலைகுனித்து *ஐந்தலைய–
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!* உன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

11:##
அல்வழக்கொன்றுமில்லா *அணிகோட்டியர்கோன்* அபிமானதுங்கன்–
செல்வனைப்போலத் * திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன்*
நல்வகையால் நமோநாராயணா என்று *நாமம் பலபரவி*
பல்வகையாலும் பவித்திரனே! *உன்னைப் பல்லாண்டு கூறுவனே. (2)

12:##
பல்லாண்டென்று பவித்திரனைப்* பரமேட்டியை *சார்ங்கம் என்னும்–
வில்லாண்டான் தன்னை* வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்*
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்* நமோ நாராயணாயவென்று*
பல்லாண்டும் பரமாத்மனை* சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே. (2)

திருப்பள்ளியெழுச்சி

தமேவமத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்கணீயம்
ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரி ரேணும் பகவந்த மீடே.

மண்டங் குடியென்பர் மாமறையோர்,* மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்,* – வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்து அம்மானைப்,* பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்*
 கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்,*
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்*
 வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி,*
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த*
 இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்,*
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்*
 அரங்கத்து அம்மா! பள்ளி எழுந்து அருளாயே. (2) (1)

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்*
 கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ,*
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்*
 ஈன்பனி நனைந்த தம் இருசிறகு உதறி,*
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்*
 வெள்ளெயிறுறவதன் விடத்தனுக்கு அனுங்கி,*
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (2)

சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்*
 துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி,*
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ*
 பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின்,*
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற*
 வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ,*
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (3)

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்*
 வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்,*
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்*
 இருந்தின சுரும்பினம் இலங்கையர் குலத்தை,*
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!*
 மாமுனி வேள்வியைக் காத்து,* அவ பிரதம்–
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம் அரசே!*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (4)

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய்*
 போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி,*
கலந்தது குணதிசை கனைகடல் அரவம்*
 களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த,*
அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான்*
 அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா*
இலங்கையர் கோன் வழிபாடு செய்கோயில்*
 எம்பெருமான்!பள்ளி எழுந்து அருளாயே. (5)

இரவியர் மணிநெடும் தேரொடும் இவரோ?*
 இறையவர் பதினொரு விடையரும் இவரோ?*
மருவிய மயிலினன் அறுமுகன் இவனே?*
 மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி,*
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்*
 குமரதண்டம் புகுந் தீண்டிய வெள்ளம்,*
அருவரை அனைய நின் கோயில்முன் இவரோ?*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (6)

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ?*
 அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ?*
இந்திரன் ஆனையும் தானும் வந்து இவனே?*
 எம்பெருமான் உன் கோயிலின் வாசல்,*
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க*
 இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,*
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ?*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (7)

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க*
 மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா,*
எம்பெருமான் படி மக்கலம் காண்டற்கு*
 ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்,*
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ?*
 தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி,*
அம்பரதலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (8)

ஏதமில் தண்ணுமை யெக்கம்மத் தளியே*
 யாழ்குழல் முழவமோடு இசைதிசை கெழுமி,*
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்*
 கந்தரு வரவர் கங்குலுள் எல்லாம்,*
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்*
 சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்,*
ஆதலில் அவர்க்கு நாளோலக்கம் அருள*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (2) (9)

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?*
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?*
துடியிடையார் சுரி குழல் பிழிந்துதறித்*
துகிலுடுத்து ஏறினர் சூழ்புனல் அரங்கா,*
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து*
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும்–
அடியனை,* அளியன் என்று அருளி உன் அடியார்க்கு–
ஆட்படுத்தாய்!* பள்ளி எழுந்து அருளாயே! (2) (10)

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

திருப்பாவை

தனியன்

நீளாதுங்க ஸ்தநகிரிதட ஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதி சதசிரஸ் ஸித்தமத்யா பயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யாபலாத் க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யை நமஇதமிதம் பூய ஏவாஸ்து பூய:

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்
இன்னிசையால் பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை
பூமாலை சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்
நாடி நீ வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்*
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்*
கார் மேனி செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்*
நாராயணனே நமக்கே பறை தருவான்*
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்

2. வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்*
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்*
பையத் துயின்ற பரமனடி பாடி*
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்*
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி*
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி*
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்*
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரி பெய்து*
ஓங்கு பெறும் செந் நெல் ஊடு கயலுகளப்*
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்*
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி–
வாங்க * குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்*
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

4. ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்*
ஆழி உள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி*
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்*
பாழியம் தோளுடைய பற்பநாபன் கையில்*
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து*
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்*
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்*
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

5. மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத்*
தூய பெரு நீர் யமுனைத் துறைவனை*
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்*
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்*
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது*
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்*
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்.

6. புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்*
வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ*
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு*
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி*
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை*
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்*
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

7. கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தான்* கலந்து–
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே*
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து*
வாச நறும் குழல் ஆய்ச்சியர்* மத்தினால்–
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ*
நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி*
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ*
தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய்

8. கீழ் வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு*
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்*
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து* உன்னைக்–
கூவுவான் வந்து நின்றோம்* கோதுகலமுடைய–
பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு*
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்*
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

9. தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரியத்*
தூபம் கமழத் துயிலணைமேல் கண் வளரும்*
மாமான் மகளே மணிக் கதவம் தாழ் திறவாய்*
மாமீர் அவளை எழுப்பீரோ* உன் மகள் தான்–
ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ*
ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ*
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
நாமன் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!*
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்*
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்*
போற்றப் பறை தரும் புண்ணியனால் பண்டு ஒரு நாள்*
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணனும்*
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ*
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே*
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.

11. கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து*
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்*
குற்றம் ஒன்றில்லாத கோவலர்த்தம் பொற்கொடியே*
புற்று அரவு அல்குல் புனமயிலே போதராய்*
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து * நின்–
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட*
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி *நீ–
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்

12. கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி*
நினைத்து முலை வழியே நின்று பால் சோர*
நனைத்து இல்லம் சேறாக்கும் நற் செல்வன் தங்காய்*
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்*
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற*
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்*
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்*
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்

13. புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்*
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்தி மை பாடிப் போய்ப்*
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்*
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று*
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்*
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே*
பள்ளிக் கிடத்தியோ! பாவாய்! நீ நன் நாளால்*
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்.

14. உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்*
செங்கழுனீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்*
செங்கற் பொடிக் கூரை வெண்பல் தவத்தவர்*
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதன்றுர்*
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்*
நங்காய் எழுந்திராய் நாணுதாய் நாவுடையாய்*
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்*
பங்கயக் கண்ணனைப் பாடேலோர் எம்பாவாய்.

15. எல்லே! இளம் கிளியே இன்னம் உறங்குதியோ*
சில் என்று அழையேன் மின் நங்கையீர் போதருகின்றேன்*
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்*
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக*
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை*
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்து எண்ணிக்கொள்*
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க–
வல்லானை* மாயனைப் பாடேலோர் எம்பாவாய்

16. நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய*
கோயில் காப்பானே! கொடி தோன்றும் தோரண–
வாயில் காப்பானே!* மணிக் கதவம் தாள் திறவாய்*
ஆயர் சிறுமியரோமுக்கு* அறை பறை–
மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்*
தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்*
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா!* நீ–
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய்

17. அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்*
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்*
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே*
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்*
அம்பரம் ஊட அறுத்து ஓங்கி உளகு அளந்த*
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்*
செம் பொற் கழலடிச் செல்வா பலதேவா*
உம்பியும் நீயுன் உறங்கேலோர் எம்பாவாய்.

18. உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்*
நந்தகோபன் மருமகளே நப்பின்னாய்*
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்*
வந்து எங்கும் கோழி அழைத்தன காண்* மாதவிப்–
பந்தல் மேல் பல் கால் குயிலினங்கள் கூவின காண்*
பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்*
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப*
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

19. குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல்*
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்*
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்*
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்*
மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை*
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்*
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால்*
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்

20. முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று*
கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்*
செப்பம் உடையாய் திறல் உடையாய் *செற்றார்க்கு–
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்*
செப்பென்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்*
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்*
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை*
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய்

21. ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப*
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்*
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்*
ஊற்றம் உடையாய் பெரியாய் *உலகினில்–
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்*
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற் கண்*
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே*
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய்

22. அங்கண் மாஞாலத்து அரசர் *அபிமான–
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே*
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்*
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே*
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ*
திங்களும் ஆதித்தனும் எழுந்தாற் போல்*
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்*
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்

23. மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்*
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி*
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்*
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா* உன்–
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் *கோப்புடைய–
சீரிய சிங்காசனத்து இருந்து *யாம் வந்த–
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

24. அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி*
சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி*
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி*
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி*
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி*
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி*
என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்*
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து* ஓர் இரவில்–
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்*
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த*
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்*
நெருப்பென்ன நின்ற நெடுமாலே!,* உன்னை–
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்*
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி*
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

26. மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்*
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்*
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன*
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே*
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே*
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே*
கோல விளக்கே கொடியே விதானமே*
ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய்

27. கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா *உன்தன்னைப்–
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்*
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்*
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே*
பாடகமே என்றனைய பலகலனும் யாம் அணிவோம்*
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு*
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்*
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

28. கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்*
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்*
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்*
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா* உன்தன்னோடு–
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது*
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னை*
சிறு பேர் அழைத்தனம் சீறி அருளாதே*
இறைவா நீ தாராய் பறையேலோர் எம்பாவாய்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

29. சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து* உன்–
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்*
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து *நீ–
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது*
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா*
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் *உன் தன்னோடு–
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

30. வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை*
திங்கள் திருமுகத்து சேய் இழையார் சென்று இறைஞ்சி*
அங்கப் பறை கொண்ட ஆற்றை* அணி புதுவைப்–
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன*
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே*
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத்தோள்*
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்*
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணி மாடம் தோன்றும் ஊர்
நீதியால் நல்ல பத்தர் வாழும் ஊர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்
பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பது வம்பு.

திருவாடிப் பூரத்து செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே
பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற்கே கண்ணியுகந்தருளிதாள் வாழியே
மருவாரும் திருமல்லி வள நாடி வாழியே
வண்புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

நீராட்டம்
[கண்ணனை நீராட அழைத்தல்.]

வெண்ணெயளைந்த குணுங்கும்* விளையாடு புழுதியும் கொண்டு*
திண்ணென இவ்விரா உன்னைத்* தேய்த்துக் கிடக்க நான்ஒட்டேன்*
எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு* இங்கு எத்தனைபோதும் இருந்தேன்*
நண்ணலரியபிரானே!* நாரணா! நீராடவாராய். (2) 1.

கன்றுகள் ஓடச்செவியில்* கட்டெறும்பு பிடித்திட்டால்*
தென்றிக் கெடுமாகில்* வெண்ணெய்திரட்டி விழுங்குமாகாண்பன்*
நின்ற மராமரம் சாய்த்தாய்!* நீ பிறந்த திருவோணம்*
இன்று நீ நீராடவேண்டும்* எம்பிரான்! ஓடாதேவாராய். 2.

பேய்ச்சிமுலை உண்ணக்கண்டு* பின்னையும் நில்லாது என்னெஞ்சம்*
ஆய்ச்சியர் எல்லாம்கூடி* அழைக்கவும் நான்முலைதந்தேன்*
காய்ச்சின நீரொடு நெல்லி* கடாரத்தில் பூரித்துவைத்தேன்*
வாய்த்தபுகழ் மணிவண்ணா!* மஞ்சனமாடநீவாராய். 3.

கஞ்சன் புணர்ப்பினில் வந்த* கடியசகடம் உதைத்து*
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச* வாய்முலை வைத்தபிரானே!*
மஞ்சளும் செங்கழுநீரின்* வாசிகையும் நாறுசாந்தும்*
அஞ்சனமும் கொண்டுவைத்தேன்* அழகனே! நீராடவாராய். 4.

அப்பம் கலந்த சிற்றுண்டி* அக்காரம் பாலில் கலந்து*
சொப்பட நான் சுட்டுவைத்தேன்* தின்னல் உறிதியேல்நம்பீ!*
செப்பிள மென்முலையார்கள்* சிறுபுறம் பேசிச்சிரிப்பர்*
சொப்பட நீராடவேண்டும்* சோத்தம்பிரான்! இங்கேவாராய். 5.

எண்ணெய்க் குடத்தை உருட்டி* இளம்பிள்ளை கிள்ளியெழுப்பி*
கண்ணைப் புரட்டி விழித்துக்* கழகண்டு செய்யும்பிரானே!*
உண்ணக் கனிகள் தருவன்* ஒலிகடல் ஓதநீர்போலே*
வண்ணம் அழகியநம்பீ!* மஞ்சனமாட நீவாராய். 6.

கறந்தநற் பாலும் தயிரும்* கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய்*
பிறந்ததுவே முதலாகப்* பெற்றறியேன் எம்பிரானே!*
சிறந்தநற்றாய் அலர்தூற்றும்* என்பதனால் பிறர்முன்னே*
மறந்தும் உரையாட மாட்டேன்* மஞ்சனமாட நீவாராய். 7.

கன்றினை வாலோலை கட்டிக்* கனிகள் உதிரஎறிந்து*
பின்தொடர்ந்து ஓடிஓர்பாம்பைப்* பிடித்துக்கொண்டு ஆட்டினாய்போலும்*
நின்திறத்தே நல்லேன்நம்பீ!* நீபிறந்த திருநல்நாள்*
நன்று நீநீராட வேண்டும்* நாரணா! ஓடாதேவாராய். 8.

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

பூணித் தொழுவினில் புக்குப்* புழுதியளைந்த பொன்மேனி*
காணப்பெரிதும் உகப்பன்* ஆகிலும் கண்டார் பழிப்பர்*
நாணெத்தனையும் இலாதாய்!* நப்பின்னை காணில்சிரிக்கும்*
மாணிக்கமே! என்மணியே!* மஞ்சனமாட நீவாராய். 9.

கார்மலி மேனி நிறத்துக்* கண்ணபிரானை உகந்து*
வார்மலி கொங்கை யசோதை* மஞ்சன மாட்டியவாற்றை*
பார்மலிதொல் புதுவைக்கோன்* பட்டர்பிரான் சொன்னபாடல்*
சீர்மலி செந்தமிழ் வல்லார்* தீவினையாதும் இலரே. (2) 10.

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

அமலனுதிபிரான்

தனியன்கள்

பெரிய நம்பிகள் அருளியது

ஆபாத சூடமநுபூய ஹரிம்ஶயாநம்
மத்த்யேகவேர துஹிதுர்முதிதாந்தராத்மா
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணும்
யோநிஶ்சிகாய மநவை முநிவாஹநந்தம்.

திருமலை நம்பிகள் அருளியது

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடை உந்தி,
தேட்டரும் உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்,
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து,
பாட்டினுல் கண்டு வாழும் பாணர்தாள் பரவினேமே.

அமலன் ஆதிபிரான் * அடியார்க்கு என்னை ஆட்படுத்த–
விமலன், *விண்ணவர் கோன் *விரையார் பொழில் வேங்கடவன்,*
நிமலன் நின்மலன் நீதி வானவன், *நீள்மதிள் அரங்கத்து அம்மான், *திருக்–
கமல பாதம் வந்து* என்கண்ணினுள்ளன ஒக்கின்றதே. (2) (1)

உவந்த உள்ளத்தனுய்* உலகம் அளந்து அண்டமுற,*
நிவந்த நீள்முடியன்* அன்று நேர்ந்த நிசாசரரை,*
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் *கடியார்பொழில் அரங்கத் தம்மான்,*
அரைச்சிவந்த ஆடையின் மேல் *சென்றதாம் என் சிந்தனையே. (2)

மந்தி பாய்* வட வேங்கட மாமலை,* வானவர்கள்,–
சந்தி செய்ய நின்றுன்* அரங்கத்து அரவின் அணையான்,*
அந்தி போல் நிறத்து ஆடையும் *அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில்*
உந்தி மேலதன்றே* அடியேன் உள்ளத்து இன்னுயிரே. (2) (3)

சதுரமா மதிள்சூழ்* இலங்கைக்கு இறைவன் தலைபத்து–
உதிர வோட்டி,* ஓர் வெங்கணை* உய்த்தவன் ஓத வண்ணன்*
மதுரமா வண்டு பாட* மாமயில் ஆடரங்கத்து அம்மான்,*திருவயிற்று–
உதர பந்தம்* என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே. (4)

பாரமாய* பழவினை பற்றறுத்து,* என்னைத்தன்–
வாரமாக்கி வைத்தான்* வைத்ததன்றி என்னுள் புகுந்தான்,*
கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன்* அரங்கத்து அம்மான்,*திரு–
வார மார்பதன்றே* அடியேனை ஆட்கொண்டதே. (5)

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

துண்ட வெண்பிறையான்* துயர் தீர்த்தவன்* அஞ்சிறைய–
வண்டுவாழ் பொழில்சூழ்* அரங்கநகர் மேய அப்பன்*
அண்டர் அண்ட பகிரண்டத்து* ஒரு மாநிலம் எழுமால்வரை, *முற்றும்–
உண்ட கண்டம் கண்டீர் *அடியேனை உய்யக்கொண்டதே. (6)

கையினார் *சுரி சங்கனல் ஆழியர்,* நீள்வரை போல்–
மெய்யனார் *துளப விரையார் கமழ் நீள் முடியெம்
ஐயனார்,* அணியரங்கனார் *அரவின் அணைமிசை மேய மாயனார்,*
செய்ய வாய் ஐயோ!* என்னைச் சிந்தை கவர்ந்ததுவே! (7)

பரியனாகி வந்த* அவுணன் உடல்கீண்ட,* அமரர்க்கு–
அரிய ஆதிபிரான்* அரங்கத்து அமலன் முகத்து,*
கரியவாகிப் புடைபரந்து* மிளிர்ந்து செவ்வரியோடி,* நீண்டவப்–
பெரிய வாய கண்கள்* என்னைப் பேதைமை செய்தனவே! (8)

ஆலமா மரத்தின் இலைமேல்* ஒரு பாலகனாய்,*
ஞாலம் ஏழும் உண்டான்* அரங்கத்து அரவின் அணையான்,*
கோல மாமணி ஆரமும்* முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில்*
நீல மேனி ஐயோ! * நிறை கொண்டது என் நெஞ்சினையே! (2) (9)

கொண்டல் வண்ணனைக்* கோவலனாய் வெண்ணெய்–
உண்ட வாயன்* என்னுள்ளம் கவர்ந்தானை,*
அண்டர் கோன் அணி அரங்கன்* என் அமுதினைக்–
கண்ட கண்கள்,* மற்றொன்றினைக்* காணாவே. (2) (10)

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

கண்ணி நுண்சிறுத்தாம்பு

தனியன்கள்

ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்தவை

அவிதித விஷயாந் தரஶ்ஶடாரே
ருபநிஷதா முபகா நமாத்ரபோக:
அபிசகுணவஶாத் ததேகஸேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து.

இருகவிற்ப நேரிசை வெண்பா

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த,
மாறன் சடகோபன் வண்குருகூர்– ஏறு,எங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வார் அவரே அரண்.

கண்ணி நுண் சிறுத் தாம்பினால் *கட்டுண்ணப்–
பண்ணிய பெரு மாயன்,*என்னப்பனில்,*
நண்ணித் தென்குருகூர்* நம்பி என்றக்கால்,*
அண்ணிக்கும் அமுதூறும்* என் நாவுக்கே. (2) (1)

நாவினால் நவிற்று *இன்பம் எய்தினேன்,*
மேவினேன்* அவன் பொன்னடி மெய்ம்மையே,*
தேவு மற்றறியேன் *குருகூர் நம்பி,*
பாவின் இன்னிசை* பாடித் திரிவனே. (2)

திரி தந்தாகிலும்* தேவ பிரானுடை,*
கரிய கோலத்* திருவுருக் காண்பன் நான்,*
பெரிய வண்குருகூர்* நகர் நம்பிக்காள்–
உரியனாய்,* அடியேன்* பெற்ற நன்மையே. (3)

நன்மையால் மிக்க* நான்மறை ஆளர்கள்,*
புன்மை ஆகக்* கருதுவர் ஆதலின்,*
அன்னையாய் அத்தனாய் *என்னை ஆண்டிடும்–
தன்மையான்,*சடகோபன்* என் நம்பியே. (4)

நம்பினேன்* பிறர் நன்பொருள் தன்னையும்,*
நம்பினேன் *மட வாரையும் முன்னெல்லாம்,*
செம்பொன் மாடத்* திருக்குருகூர் நம்பிக்கு–
அன்பனாய்,*அடியேன்* சதிர்த்தேன் இன்றே. (5)

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

இன்று தொட்டும்* எழுமையும் எம்பிரான்,*
நின்று தன்* புகழ் ஏத்த அருளினுன்,*
குன்ற மாடத்* திருக்குகூர் நம்பி,*
என்றும் என்னை* இகழ்விலன் காண்மினே. (6)

கண்டு கொண்டென்னைக்* காரி மாறப்பிரான்,*
பண்டை வல்வினை* பாற்றி அருளினுன்,*
எண்திசையும் *அறிய இயம்புகேன்,*
ஒண்தமிழ் *சடகோபன் அருளையே. (7)

அருள் கொண்டாடும் *அடியவர் இன்புற,*
அருளினுன் *அவ்வருமறையின்பொருள்,*
அருள்கொண்டு* ஆயிரம் இன்தமிழ் பாடினுன்,*
அருள்கண்டீர்* இவ்வுலகினில் மிக்கதே. (8)

மிக்க வேதியர்* வேதத்தின் உட்பொருள்*
நிற்கப் பாடி* என் நெஞ்சுள் நிறுத்தினுன்,*
தக்க சீர்* சடகோபன் என் நம்பிக்கு,*ஆட்–
புக்க காதல் *அடிமைப் பயனன்றே? (9)

பயனன்று ஆகிலும்* பாங்கலர் ஆகிலும்*
செயல் நன்ருகத் *திருத்திப் பணிகொள்வான்,*
குயில் நின்ருர் பொழில் சூழ் *குருகூர் நம்பி,*
முயல்கின்றேன் *உன்தன் மொய்கழற்கு அன்பையே. (2) (10)

அன்பன் தன்னை* அடைந்தவர்க்கட்கு எல்லாம்–
அன்பன்,* தென்குருகூர் *நகர் நம்பிக்கு,*
அன்பனுய்* மதுரகவி சொன்னசொல்–
நம்பு வார்பதி,* வைகுந்தம் *காண்மினே. (2) (11)

ஸ்ரீ மதுகவியாழ்வார் திருவடிகளே சரணம்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழி

திருவாய்மொழித் தனியன்கள்

நாதமுனிகள் அருளிச்செய்தது:

பக்தாம்ருதம் விச்வ ஜனனு மோதனம்*
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோப வாங்க்மயம்*
ஸகஸ்ர சாகோப நிஷத்ஸமாகமம்*
நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம். *

வெண்பாக்கள்

ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது:

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும், *
மருவினிய வண்பொரு நலென்றும், * – அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே* எப்பொழுதும்,
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து.

சொட்டை நம்பிகள் அருளிச்செய்தது:

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்*
இனத்தாரையல்லா திறைஞ்சேன், * – தனத்தாலும்
ஏதும் குறைவிலேன்* எந்தை சடகோபன்,
பாதங்கள் யாமுடைய பற்று.

அனந்தாழ்வான் அருளிச்செய்த்து:

ஏய்ந்தபெருங்கீர்த்தி இராமானுசமுனிதன்*
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன், * – ஆய்ந்தபெருஞ்ச்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம்தரிக்கும், *
பேராத உள்ளம் பெற.

பட்டர் அருளிச்செய்தவை:

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்*
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும், * – ஈன்ற
முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த*
இதத்தாய் இராமுனுசன்.

மிக்க விறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும், *
தக்க நெறியும் தடையாகித் – தொக்கியலும், *
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன், *
யாழினிசை வேதத் தியல்.

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி.

முதல் திருமொழி

உயர்வற உயர்நலம்* உடையவன் எவன்? அவன்*
மயர்வற மதிநலம்* அருளினன் எவன்? அவன்*
அயர்வறும் அமரர்கள்* அதிபதி எவன்? அவன்*
துயரறு சுடரடி* தொழுதெழு என்மனனே! (2) 1.1.1

மனனகமலமற* மலர்மிசை எழுதரும்*
மனனுணர் வளவிலன்,* பொறியுணர் வவையிலன்*
இனனுணர், முழுநலம்,* எதிர்நிகழ் கழிவினும்*
இனனிலன் எனன்உயிர்,* மிகுநரை யிலனே. 1.1.2

இலனது உடையனிது* எனநினை அரியவன்*
நிலனிடை விசும்பிடை* உருவினன் அருவினன்*
புலனொடு புலனலன்,* ஒழிவிலன், பரந்த* அந்
நலனுடை ஒருவனை* நணுகினம் நாமே.* 1.1.3

நாமவன் இவன்உவன்,* அவள்இவள் உவளெவள்*
தாமவர் இவர்உவர்,* அதுவிது வுதுவெது*
வீமவையிவையுவை,* அவைநலம், தீங்கவை*
ஆமவை, ஆயவை ஆய்* நின்ற அவரே.* 1.1.4

அவரவர் தமதமது* அறிவறி வகைவகை*
அவரவர் இறையவர்* எனஅடி அடைவர்கள்*
அவரவர் இறையவர்* குறைவிலர்; இறையவர்*
அவரவர் விதிவழி* அடைய நின்றனரே. 1.1.5

நின்றனர் இருந்தனர்* கிடந்தனர் திரிந்தனர்*
நின்றிலர் இருந்திலர்* கிடந்திலர் திரிந்திலர்*
என்றுமொர் இயல்வினர்* எனநினை வரியவர்*
என்றுமொர் இயல்வொடு* நின்றவெந் திடரே. 1.1.6

திடவிசும் பெரிவளி* நீர்நிலம் இவைமிசை*
படர்பொருள் முழுவதுமாய்* அவை அவைதொறும்*
உடல்மிசை உயிரெனக்* கரந்தெங்கும் பரந்துளன்*
சுடர்மிகு சுருதியுள்* இவையுண்ட சுரனே. 1.1.7

சுரரறி வருநிலை* விண்முதல் முழுவதும்*
வரன் முதலாயவை* முழுதுண்ட பரபரன்*
புரமொரு மூன்றெரித்து* அமரர்க்கு அறிவியந்து*
அரனயன் என* உலகழித்தமைத் துளனே. 1.1.8

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

உளனெனில் உளன்அவன்* உருவம்இவ்வுருவுகள்*
உளனலனெனில், அவன்* அருவமிவ்வருவுகள்*
உளனென இலனென* இவைகுண முடைமையில்*
உளன்இரு தகைமையொடு* ஒழிவிலன் பரந்தே. 1.1.9

பரந்ததண் பரவையுள்* நீர்தொறும் பரந்துளன்*
பரந்த அண்டமிதென:* நிலவிசும் பொழிவற*
கரந்த சிலிடந்தொறும்* இடந்திகழ் பொருள்தொறும்*
கரந்தெங்கும் பரந்துளன்:* இவையுண்ட கரனே. 1.1.10

கரவிசும் பெரிவளி* நீர்நில மிவைமிசை*
வரனவில் திறல்வலி* அளிபொறையாய் நின்ற*
பரன்அடி மேல்* குருகூர்ச் சடகோபஞ்சொல்*
நிரல் நிறை ஆயிரத்து* இவைபத்தும் வீடே. (2) 1.1.11

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

5ம் பத்து
எட்டாம் திருமொழி

ஆரா அமுதே! அடியேன் உடலம்* நின்பால் அன்பாயே*
நீராய் அலைந்து கரைய* உருக்குகின்ற நெடுமாலே*
சீரார் செந்நெல் கவரி வீசும்* செழுநீர்த் திருகுடந்தை*
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்!* கண்டேன் எம்மானே!*. (2) 5.8.1

எம்மானே! என் வெள்ளை மூர்த்தி!* என்னை ஆள்வானே*
எம்மா உருவும் வேண்டும் ஆற்றல்* ஆவாய் எழிலேறே*
செம்மா கமலம் செழுநீர் மிசைக்கண்மலரும்* திருக்குடந்தை*
அம்மா மலர்க்கண் வளர்கின்றானே!* என்நான் செய்கேனே!*. 5.8.2

என்நான் செய்கேன்! யாரே களைகண்?* என்னை என் செய்கின்றாய்?*
உன்னால் அல்லால் யாவராலும்* ஒன்றும் குறை வேண்டேன்*
கன்னார் மதிள்சூழ் குடந்தைக் கிடந்தாய்!* அடியேன் அருவாணாள்*
சென்னாள் எந்நாள்?அந்நாள்* உனதாள் பிடித்தே செலக்காணே*. 5.8.3

செலக்காண் கிற்பார் காணும் அளவும்* செல்லும் கீர்த்தியாய்*
உலப்பிலானே! எல்லாவுலகும் உடைய* ஒரு மூர்த்தி*
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்!* உன்னைக் காண்பான் நான்–
அலப்பாய்*ஆகாசத்தை நோக்கி* அழுவன் தொழுவனே*. 5.8.4

அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன்* பாடி அலற்றுவன்*
தழுவல் வினையால் பக்கம் நோக்கி* நாணிக் கவிழ்ந்திருப்பன்*
செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய்!* செந்தாமரைக் கண்ணா!*
தொழுவனேனை உனதாள்* சேரும் வகையே சூழ்கண்டாய்*. 5.8.5

சூழ்கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து* உன் அடிசேரும்–
ஊழ்கண்டிருந்தே* தூராக் குழிதூர்த்து* எனைநாள் அகன்றிருப்பன்?*
வாழ்தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்!* வானோர் கோமானே*
யாழினிசையே! அமுதே!* அறிவின் பயனே! அரியேறே!*. 5.8.6

அரியேறே! என்னம் பொற்சுடரே!* செங்கண் கருமுகிலே!*
எரியே! பவளக் குன்றே!* நால்தோள் எந்தாய்! உனதருளே*
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்* குடந்தைத் திருமாலே*
தரியேன் இனி உன் சரணம் தந்து* என் சன்மம் களையாயே*. 5.8.7

களைவாய் துன்பம் களையா தொழிவாய்* களைகண் மற்றிலேன்*
வளைவாய் நேமிப் படையாய்!* குடந்தைக் கிடந்த மாமாயா*
தளரா உடலம் எனதாவி* சரிந்து போம் போது*
இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்து* போத இசை நீயே*. 5.8.8

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

இசைவித்து என்னை உன்தாளிணை கீழ்* இருத்தும் அம்மானே*
அசைவில் அமரர் தலைவர் தலைவா* ஆதிப் பெரு மூர்த்தி*
திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும்* திருக்குடந்தை*
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்!* காண வாராயே*. 5.8.9

வாரா வருவாய் வருமென் மாயா!* மாயா மூர்த்தியாய்*
ஆராவமுதாய் அடியேன் ஆவி* அகமே தித்திப்பாய்*
தீராவினைகள் தீர என்னை ஆண்டாய்!* திருக்குடந்தை-
ஊரா!* உனக்காட்பட்டும் *அடியேன் இன்னம் உழல்வேனோ?*. (2) 5.8.10

உழலை என்பின் பேய்ச்சி முலையூடு* அவளை உயிருண்டான்*
கழல்கள் அவையே சரணாக கொண்ட* குருகூர்ச் சடகோபன்*
குழலின் மலியச் சொன்ன* ஓராயிரத்துள் இப்பத்தும்*
மழலை தீர வல்லார்* காமர் மானேய் நோக்கியர்க்கே*.(2) 5.8.11

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

6ம் பத்து
பத்தாம் திருமொழி

உலகம் உண்ட பெருவாயா!* உலப்பில் கீர்த்தி அம்மானே,*
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி!* நெடியாய்! அடியேன் ஆருயிரே,*
திலதம் உலகுக்காய் நின்ற* திருவேங்கடத்து எம் பெருமானே,*
குலதொல் அடியேன் உனபாதம்* கூடுமாறு கூறுயே. 6.10.1

கூறுய் நீறுய் நிலனுகிக்* கொடுவல் அசுரர் குலமெல்லாம்*
சீறு எறியும் திருநேமி வலவா!* தெய்வக் கோமானே,*
சேறுர் சுனைத்தாமரை செந்தீ மலரும்* திருவேங்கடத்தானே,*
ஆறு அன்பில் அடியேன்* உன் அடிசேர் வண்ணம் அருளாயே. 6.10.2

வண்ண மருள்கொள் அணிமேக வண்ணு!* மாய அம்மானே,*
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே!* இமையோர் அதிபதியே,*
தெண்ணல் அருவி மணிபொன் முத்தலைக்கும்* திருவேங்கடத்தானே,*
அண்ணலே! உன் அடிசேர* அடியேற்கு ஆவா வென்னுயே! 6.10.3

ஆவா என்னுது உலகத்தை அலைக்கும்* அசுரர் வாணுள்மேல்,*
தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா!* திருமாமகள் கேள்வா,*
தேவாசுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும்* திருவேங்கடத்தானே,*
பூவார் கழல்கள் அருவினையேன்* பொருந்துமாறு புணராயே. 6.10.4

புணரா நின்ற மரமேழ்*அன்றெய்த ஒருவில் வலவாவோ,*
புணரேய் நின்ற மரமிரண்டின்* நடுவே போன முதல்வாவோ,*
திணரார் மேகம் எனக்களிறு சேரும்* திருவேங்கடத்தானே,*
திணரார் சார்ங்கத்து உனபாதம்* சேர்வ தடியே னெந்நாளே? 6.10.5

எந்நாளே நாம் மண்ணளந்த* இணைத் தாமரைகள் காண்பதற்கெ'ன்று,*
எந்நாளும் நின்று இமையோர்கள் ஏத்தி* இறைஞ்சி இனமினமாய்,*
மெய்ந்நா மனத்தால் வழிபாடு செய்யும்* திருவேங்கடத்தானே,*
மெய்ந்நான் எய்தி எந்நாள்* உன் அடிக்கண் அடியேன் மேவுவதே? 6.10.6

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே!* இமையோர் அதிபதியே,*
கொடியா அடுபுள் உடையானே!* கோலக் கனிவாய்ப் பெருமானே,*
செடியார் வினைகள் தீர்மருந்தே!* திருவேங்கடத்து எம்பெருமானே,*
நொடியார் பொழுதும் உனபாதம்* காண நோலா தாற்றேனே. 6.10.7

நோலாதாற்றேன் உனபாதம்* காண வென்று நுண்ணுணர்வின்,*
நீலார் கண்டத் தம்மானும்* நிறைநான்முகனும் இந்திரனும்,*
சேலேய் கண்ணுர் பலர்சூழ விரும்பும்* திருவேங்கடத்தானே,*
மாலாய் மயக்கி அடியேன்பால்* வந்தாய் போல வாராயே. 6.10.8

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

வந்தாய் போலே வாராதாய்!* வாராதாய்போல் வருவானே,*
செந்தாமரைக்கண் செங்கனிவாய்* நால்தோளமுதே! எனதுயிரே,*
சிந்தா மணிகள் பகரல்லைப் பகல்செய்* திருவேங்கடத்தானே,*
அந்தோ! அடியேன் உன்பாதம்* அகலகில்லேன் இறையுமே. 6.10.9

(சாற்றுமறை)
அகல கில்லேன் இறையும் என்று*அலர்மேல் மங்கை உறைமார்பா,*
நிகரில் புகழாய்! உலகமூன்று உடையாய்!* என்னை ஆள்வானே,*
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்* திருவேங்கடத்தானே*
புகல் ஒன்றில்லா அடியேன்* உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே. 6.10.10

(சாற்றுமறை)
அடிக்கீழ் அமர்ந்து புகுந்து* அடியீர்! வாழ்மின்' என்றென்றருள் கொடுக்கும்*
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்* பழனக் குருகூர்ச் சடகோபன்,*
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்* திருவேங்கடத்துக்கு இவைபத்தும்,*
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து* பெரிய வானுள் நிலாவுவரே. 6.10.11

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

பத்தாம் பத்து
பத்தாம் திருமொழி

முனியே!நான்முகனே!* முக்கண்ணப்பா* என்பொல்லாக்–
கனிவாய்த்* தாமரைக்கண் கருமாணிக்கமே என்கள்வா!*
தனியேனாருயிரே!* எந்தலை மிசையாய் வந்திட்டு*
இனிநான் போகலொட்டேன்* ஒன்றும்மாயஞ் செய்யேல் என்னையே. 10.10.1 (2)

மாயம்செய்யேல் என்னை* உன்திருமார்வத்து மாலைநங்கை*
வாசம்செய் பூங்குழலாள்* திருவாணை நின்னாணை கண்டாய்*
நேசம்செய்து உன்னோடு என்னை* உயிர் வேறின்றி ஒன்றாகவே*
கூசஞ்செய்யாது கொண்டாய்* என்னைக்கூவிக் கொள்ளாய் வந்தந்தோ! 10.10.2

கூவிக்கொள்ளாய் வந்தந்தோ!* என்பொல்லாக் கருமாணிக்கமே!*
ஆவிக்குஓர் பற்றுக்கொம்பு* நின்னலால் அறிகின்றி லேன்யான்*
மேவித்தொழும் பிரமன் சிவன்* இந்திரன் ஆதிக்கெல்லாம்*
நாவிக் கமல முதற்கிழங்கே!* உம்பர் அந்ததுவே. 10.10.3

உம்பரந்தண் பாழேயோ!* அதனுள்மிசை நீயேயோ*
அம்பர நற்சோதி!* அதனுள் பிரமன் அரன் நீ*
உம்பரும் யாதவரும் படைத்த* முனிவன் அவன்நீ*
எம்பரம் சாதிக்கலுற்று* என்னைப்போர விட்டிட்டாயே. 10.10.4

போரவிட்டிட்டு என்னை* நீபுறம்போக்கலுற்றால்* பின்னையான்–
ஆரைக்கொண்டு எத்தையந்தோ!* எனதென்பதென்? யானென்பதென்?*
தீர இரும்புண்ட நீரதுபோல* என்ஆருயிரை–
ஆரப்பருக* எனக்கு ஆராவமுதானாயே. 10.10.5

எனக்கு ஆராவமுதாய்* எனதாவியை இன்னுயிரை*
மனக்காராமை மன்னி உண்டிட்டாய்* இனியுண்டொழியாய்*
புனக்காயாநிறத்த* புண்டரீகக்கண் செங்கனிவாய்*
உனக்கேற்கும் கோலமலர்ப்பாவைக்கு* அன்பா! என்அன்பேயோ! 10.10.6

கோல மலர்ப்பாவைக்கு அன்பாகிய* என் அன்பேயோ*
நீலவரை இரண்டு பிறைகவ்வி* நிமிர்ந்த தொப்ப*
கோல வராகமொன்றாய்* நிலம்கோட்டிடைக் கொண்ட எந்தாய்*
நீலக் கடல்கடைந்தாய்!* உன்னைப்பெற்று இனிப் போக்குவனோ? (2)

பெற்றினிப் போக்குவனோ* உன்னை என் தனிப்பேருயிரை*
உற்ற இருவினையாய்* உயிராய்ப் பயனாய் அவையாய்*
முற்றஇம் மூவுலகும்* பெருந்தூறாய்த் தூற்றில்புக்கு*
முற்றக் கரந்தொளித்தாய்!* என்முதல் தனிவித்தேயோ! 10.10.8

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

முதல்தனி வித்தேயோ!* முழுமுவுலகாதிக் கெல்லாம்*
முதல்தனி உன்னையுன்னை* எனைநாள் வந்து கூடுவன்நான்?*
முதல்தனி அங்குமிங்கும்* முழுமுற்றுறுவாழ் பாழாய்*
முதல்தனி சூழ்ந்த கன்றுழ்ந்துயர்ந்த* முடிவிலீயோ! 10.10.9

(சாற்றுமறை)
சூழ்ந்த கன்றுழ்ந்துயர்ந்த* முடிவில் பெரும் பாழேயோ*
சூழ்ந்ததனில் பெரிய* பரநன் மலர்ச்சோதீயோ*
சூழ்ந்ததனில் பெரிய* சுடர்ஞான இன்பமேயோ!*
சூழ்ந்ததனில் பெரிய* என் அவாவறச் சூழ்ந்தாயே! (2) 10.10.10.

(சாற்றுமறை)
அவாவறச் சூழ்* அரியை அயனை அரனை அலற்றி*
அவாவற்று வீடுபெற்ற* குருகூர்ச் சடகோபன் சொன்ன*
அவாவில் அந்தாதிகளால்* இவையாயிரமும்* முடிந்த–
அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார்* பிறந்தார் உயர்ந்தே. (2) 10.10.11

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

ஸ்ரீ:

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த ப்ரபன்னகாயத்ரி என்னும்

இராமானுச நூற்றந்தாதி

தனியன்கள்

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன் *
பொன்னங்கழற்கமலப் போதிரண்டும் * என்னுடைய–
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் * தென்புலத்தார்க்கு–
என்னுக்கடவுடையேன் யான்?

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றிநண்ணினர்பால் *
சயந்தருகீர்த்தி இராமானுசமுனி தாளிணைமேல் *
உயர்ந்தகுணத்துத் திருவரங்கத்தமுதோங்கும் அன்பால்–
இயம்பும் * கலித்துறையந்தாதி ஓதஇசைநெஞ்சமே!

சொல்லின் தொகைகொண்டு உனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும் *
நல்லன்பரேத்தும் உன் நாமம் எல்லாம் எந்தன் நாவினுள்ளே *
அல்லும்பகலும் அமரும்படி நல்கு அறுசமயம்
வெல்லும் பரம! * இராமானுச! இது என்விண்ணப்பமே.

_________ * __________

** பூமன்னுமாது பொருந்தியமார்பன் * புகழ்மலிந்த–
பாமன்னுமாறன்,/ அடிபணிந்துய்ந்தவன் *// பல்கலையோர்–
தாம்மன்னவந்த இராமானுசன்,/ சரணாரவிந்தம்–
நாம்மன்னிவாழ * நெஞ்சே!சொல்லுவோம் அவன் நாமங்களே. (2) 1

** கள்ளார்ப்பொழில் தென்னரங்கன் * கமலப்பதங்கள் நெஞ்சில்–
கொள்ளா,/ மனிசரைநீங்கி *// குறையற்பிரானடிக்கீழ்–
விள்ளாதஅன்பன் இராமானுசன், மிக்கசீலமல்லால்–
உள்ளாது என்னெஞ்சு * ஒன்றறியேன்எனக்குற்ற பேரியல்வே. (2) 2

பேரியல்நெஞ்சே! அடிபணிந்தேன் உன்னை * பேய்ப்பிறவிப்–
பூரியரோடுள்ள,/ சுற்றம்புலத்தி *// பொருவருஞ்சீர்–
ஆரியன்செம்மை இராமானுசமுனிக்கன்பு செய்யும்/
சீரியபேறுடையார் * அடிக்கீழ்என்னைச்சேர்த்ததற்கே. 3

என்னைப்புவியில் ஒருபொருளாக்கி * மருள்சுரந்த–
முன்னைப்பழவினை வேரறுத்து *// ஊழிமுதல்வனையே–
பன்னப்பணித்த இராமானுசன்,/ பரன்பாதமும் என்–
சென்னித்தரிக்கவைத்தான் * எனக்கு ஏதும்சிதைவில்லையே. 4

எனக்குற்ற செல்வம் இராமானுசனென்று * இசையகில்லா–
மனக்குற்றமாந்தர்,/ பழிக்கில்புகழ் *// அவன்மன்னியசீர்–
தனக்குற்றஅன்பர் அவன்திருநாமங்கள் சாற்றும் என்பா/
இனக்குற்றம் காணகில்லார் * பத்தியேய்ந்தஇயல்விதென்றே. 5

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

இயலும் பொருளும் இசையத்தொடுத்து * ஈன் கவிகள் அன்பால்–
மயல்கொண்டுவாழ்த்தும்,/ இராமானுசனை *// மதியின்மையால்–
பயிலுங்கவிகளில் பத்தியில்லாத என்பாவி நெஞ்சால்/
முயல்கின்றனன் * அவன்தன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே. 6

** மொழியைக் கடக்கும் பெரும்புகழான் * வஞ்சமுக்குறும்பாம்–
குழியைக்கடக்கும்,/ நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *//
பழியைக்கடத்தும் இராமானுசன் / புகழ்பாடி அல்லா/
வழியைக்கடத்தல் * எனக்கினி யாதும் வருத்தமன்றே. (2) 7

வருத்தும் புறவிருள் மாற்ற * எம்பொய்கைப்பிரான் மறையின்–
குருத்தின் பொருளையும்,/ செந்தமிழ்தன்னையும் கூட்டி *// ஒன்றத்–
திரித்தன்றெரித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே/
இருத்தும்பரமன் * இராமானுசன் எம்இறையவனே. 8

இறைவனைக்காணும் இதயத்திருள்கெட * ஞானமென்னும்–
நிறைவிளக்கேற்றிய,/ பூதத்திருவடிதாள்கள் *// நெஞ்சத்து–
உறையவைத்தாளும் இராமானுசன் / புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே. 9

மன்னியபேரிருள் மாண்டபின் * கோவலுள் மாமலராள்–
தன்னொடுமாயனைக், / கண்டமைகாட்டும் *// தமிழ்த்தலைவன்–
பொன்னடிபோற்றும் இராமானுசற்கு அன்பு பூண்டவர்தாள்/
சென்னியில்சூடும் * திருவுடையார் என்றும் சீரியரே. 10

சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழாலளித்த–
பாரியலும்புகழ்ப்,/ பாண்பெருமாள் *// சரணாம்பதுமத்–
தாரியல்சென்னி இராமானுசந்தன்னைச் சார்ந்தவர்தம்/
காரியவண்மை * என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே. 11

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போது–
அடங்கும் / இதயத்திராமானுசன் *// அம்பொற்பாதமென்றும்–
கடங்கொண்டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்/
திடங்கொண்டஞானியர்க்கே * அடியேன் அன்பு செய்வதுவே. 12

செய்யும்பசுந்துளவத் தொழில்மாலையும் * செந்தமிழில்–
பெய்யும் / மறைத்தமிழ்மாலையும் *// பேராதசீரரங்கத்து–
ஐயன் கழற்கணியும் பரன்தாளன்றி /ஆதரியா–
மெய்யன் * இராமானுசன் சரணே கதி வேறெனக்கே. 13

கதிக்குப்பதறி * வெங்கானமும் கல்லும் கடலுமெல்லாம்–
கொதிக்கத்,/ தவம்செய்யும் கொள்கையற்றேன் *// கொல்லிகாவலன்சொல்–
பதிக்கும் கலைக்கவிபாடும் பெரியவர் பாதங்களே/
துதிக்கும் பரமன் * இராமானுசன் என்னைச் சோர்விலனே. 14

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

சோராத காதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலையொன்றும்–
பாராது அவனைப்,/ பல்லாண்டென்று காப்பிடும் *// பான்மையன்தாள்–
பேராதவுள்ளத்திராமானுசன் தன் பிறங்கியசீர்/
சாரா மனிசரைச்சேரேன் * எனக்கு என்ன தாழ்வினியே? 15

** தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து * தலமுழுதும் கலியே–
ஆள்கின்ற நாள் வந்து,/ அளித்தவன்காண்மின் *// அரங்கர்மௌலி–
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்/
வாழ்கின்ற வள்ளல் * இராமானுசனென்னும் மாமுனியே. (2) 16

முனியார் துயரங்கள்முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினும்–
கனியார்மனம்,/ கண்ணமங்கை நின்றானை *// கலைபரவும்–
தனியானையைத் தண்தமிழ் செய்த நீலன் தனக்கு,/ உலகில்–
இனியானை * எங்களிராமானுசனை வந்தெய்தினரே. 17

எய்தற்கரியமறைகளை * ஆயிரம் இன்தமிழால்–
செய்தற்கு உலகில்வரும்,/ சடகோபனை *// சிந்தையுள்ளே–
பெய்தற்கிசையும் பெரியவர்சீரை உயிர்களெல்லாம்/
உய்தற்கு உதவும் * இராமானுசன் எம் உறுதுணையே. 18

உறுபெருஞ்செல்வமும் தந்தையும் தாயும் * உயர்குருவும்–
வெறிதரு / பூமகள்நாதனும் *// மாறன்விளங்கியசீர்–
நெறிதரும் செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர்/
அறிதரநின்ற * இராமானுசன் எனக்காரமுதே. 19

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத்திருவாய்–
ஈரத்தமிழின் / இசையுணர்ந்தோர்கட்கு *// இனியவர்தம்–
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை,/ நெஞ்சால்–
வாரிப்பருகும் * இராமானுசன் என்தன் மாநிதியே. 20

நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர்தம் வாசல் பற்றித்–
துதிகற்று உலகில் துவள்கின்றிலேன் இனி *// தூய்நெறிசேர்–
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம்/
கதி பெற்றுடைய * இராமானுசன் என்னைக் காத்தனனே. 21

கார்த்திகையானும் கரிமுகத்தானும் * கனலும்முக்கண்–
மூர்த்தியும் / மோடியும் வெப்பும்முதுகிட்டு *// மூவுலகும்–
பூத்தவனே! என்றுபோற்றிட வாணன்பிழைபொறுத்த, /
தீர்த்தனையேத்தும் * இராமானுசன் என்தன் சேமவைப்பே. 22

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

வைப்பாய வான்பொருள்என்று * நல்லன்பர் மனத்தகத்தே–
எப்போதும் வைக்கும் இராமானுசனை */ / இருநிலத்தில்–
ஒப்பாரிலாத உறுவினையேன் வஞ்சநெஞ்சில் வைத்து,/
முப்போதும் வாழ்த்துவன் * என்னாம்இதுஅவன்மொய் புகழ்க்கே! 23

மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல்தொறும் மூத்து * அதனால்–
எய்த்தொழிந்தேன்/ முனநாள்களெல்லாம் */ / இன்று கண்டுயர்ந்தேன்–
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்,/
கைத்தமெய்ஞ்ஞானத்து * இராமானுசனென்னும் கார்தன்னையே. 24

காரேய்கருணை இராமானுச! * இக்கடலிடத்தில்–
ஆரேயறிபவர்,/ நின்னருளின்தன்மை? */ / அல்லலுக்கு–
நேரேயுறைவிடம் நான்வந்து நீ யென்னையுய்த்தபின்,/ உன்–
சீரே உயிர்க்குயிராய் * அடியேற்கு இன்று தித்திக்குமே. 25

திக்குற்ற கீர்த்தி இராமானுசனை * என்செய்வினையாம்–
மெய்க்குற்றம் நீக்கி /விளங்கிய மேகத்தை */ / மேவுநல்லோர்–
எக்குற்றவாளர் எதுபிறப்பு ஏதியல்வாக நின்றோர்/
அக்குற்றம் அப்பிறப்பு * அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே. 26

கொள்ளக்குறைவற்றிலங்கி * கொழுந்துவிட்டோங்கியவுன்–
வள்ளல் தனத்தினால்,/ வல்வினையேன் மனம் நீ புகுந்தாய் */ /
வெள்ளைச்சுடர்விடும் உன் பெருமேன்மைக்கிழுக்கிதென்று–/
தள்ளுற்றிரங்கும் * இராமானுச! என்தனிநெஞ்சமே! 27

நெஞ்சில் கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்–
பஞ்சித்திருவடிப் / பின்னைதன்காதலன் */ / பாதம்நண்ணா–
வஞ்சர்க்கரிய இராமானுசன் / புகழன்றி என்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது * என்ன வாழ்வு இன்று கூடியதே! 28

கூட்டும் விதி என்று கூடுங்கொலோ * தென்குருகைப்பிரான்–
பாட்டென்னும்,/ வேதப் பசுந்தமிழ் தன்னை */ / தன்பத்தியென்னும்–
வீட்டின் கண் வைத்த இராமானுசன் / புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள் தன்னை * என் நாட்டங்கள் கண்டு இன்பமெய்திடவே. 29

இன்பந்தரு பெருவீடு வந்தெய்திலென்? * எண்ணிறந்த–
துன்பந்தரு / நிரயம்பல சூழிலென்? */ / தொல்லுலகில்–
மன்பல்லுயிர்கட்கிறைவன் மாயனெனமொழிந்த, /
அன்பன் அனகன் * இராமானுசன் என்னை ஆண்டனனே. 30

** ஆண்டுகள் நாள் திங்களாய் * நிகழ்காலமெல்லாம் மனமே!–
ஈண்டு,/ பல்யோனிகள் தோறுழல்வோம் */ / இன்றோரெண்ணின்றியே–
காண்தகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்/
பூண்டவன்பாளன் * இராமானுசனைப் பொருந்தினமே. (2) 31

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் * நல்ல–
திருந்திய ஞானமும் / செல்வமும் சேரும் *// செறுகலியால்–
வருந்திய ஞாலத்தை வண்மையினால் / வந்தெடுத்தளித்த–
அருந்தவன் * எங்கள் இராமானுசனை அடைபவர்க்கே. 32

அடையார்க் கமலத்து அலர்மகள் கேள்வன் * கையாழியென்னும்–
படையொடு நாந்தகமும் படர்த்தண்டும் *// ஒண்சார்ங்க வில்லும்–
புடையார்ப் புரிசங்கமும் இந்தப் பூதலங்காப்பதற்கு,/ என்று–
இடையே * இராமானுச முனியாயின இந்நிலத்தே. 33

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய–
பலத்தைச்செறுத்தும்,/ பிறங்கியதில்லை *// என் பெய்வினை தென்–
புலத்தில் பொறித்த அப்புத்தகச் சும்மை பொறுக்கியபின்–/
நலத்தைப் பொறுத்தது * இராமானுசன் தன் நயப்புகழே. 34

நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்–
புயலேயெனக்,/ கவிபோற்றி செய்யேன் *// பொன்னரங்கமென்னில்–
மயலே பெருகும் இராமனுசன்,/ மன்னு மாமலர்த்தாள்–
அயரேன் * அருவினை என்னை எவ்வாறு இன்றடர்ப்பதுவே? 35

அடல்கொண்ட நேமியன் ஆருயிர்நாதன் * அன்று ஆரணச்சொற்–
கடல்கொண்ட வொண்பொருள் கண்டளிப்பப் *// பின்னும் காசினியோர்–
இடரின் கண் வீழ்ந்திடத் தானுமவ்வொண்பொருள் கொண்டு,/ அவர்பின்–
படருங்குணன் * எம் இராமானுசன் தன் படியிதுவே. 36

படி கொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பத்திவெள்ளம் *
குடிகொண்ட கோயிலிராமானுசன் குணங்கூறும் *// அன்பர்–
கடிகொண்ட மாமாலர்த்தாள் கலந்துள்ளங்கனியும் நல்லோர்/
அடிகண்டு கொண்டுகந்து * என்னையும் ஆளவர்க்காக்கினரே. 37

ஆக்கி அடிமை நிலைப் பித்தனை * என்னை இன்றுஅவமே–
போக்கிப் புறத்திட்டது / என்பொருளாமுன்பு? *// புண்ணியர்த்தம்–
வாக்கிற் பிரியா இராமானுச! / நின்னருளின் வண்ணம்,
நோக்கில் தெரிவிரிதால் * உரையாய் இந்த நுண் பொருளே. 38

பொருளும் புதல்வரும் பூமியும் * பூங்குழலாருமென்றே–
மருள் கொண்டிளைக்கும் / நமக்குநெஞ்சே! *// மற்றுளார்த்தரமோ–
இருள் கொண்ட வெந்துயர் மாற்றித் தன்னீறில் பெரும்புகழே/
தெருளும் தெருள் தந்து * இராமானுசன் செய்யும் சேமங்களே. 39

சேமநல்வீடும் பொருளும் தருமமும் * சீரியநற்–
காமமும் / என்றிவை நான்கென்பர் *// நான்கினும் கண்ணனுக்கே–
ஆமது காமம் அறம் பொருள் வீடுதற்கென்றுரைத்தான்/
வாமனன் சீலன் * இராமானுசன் இந்த மண்மிசையே. 40

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து * எங்கள் மாதவனே–
கண்ணுற நிற்கிலும் / காணகில்லா *// உலகோர்களெல்லாம்–
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றியஅப்பொழுதே/
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு * நாரணற் காயினரே. 41

ஆயிழையார் கொங்கை தங்கும் * அக்காதலளற்றழுந்தி–
மாயும் என்னாவியை / வந்தெடுத்தான் இன்று *// மாமலராள்–
நாயகன் எல்லாவுயிர்கட்கும் நாதன்,/ அரங்கனென்னும்–
தூயவன் * தீதிலிராமானுசன் தொல்லருள் சுரந்தே. 42

சுரக்கும் திருவும் உணர்வும் * சொலப்புகில் வாயமுதம்–
பரக்கும் / இருவினைபற்றற வோடும் *// படியிலுள்ளீர்!–
உரைக்கின்றனன் உமக்கு யான் அறம் சீறுமுறுகலியைத்–/
துரக்கும் பெருமை * இராமானுசனென்று சொல்லுமினே. 43

சொல்லார் தமிழொரு மூன்றும் * சுருதிகள் நான்கும் எல்லை–
இல்லா, அறநெறி / யாவும் தெரிந்தவன் *// எண்ணருஞ்சீர்–
நல்லார் பரவும் இராமானுசன் / திருநாமம் நம்பிக்–
கல்லார் அகலிடத்தோர் * எது பேறென்று காமிப்பரே. 44

பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி* அப்பேறளித்தற்கு–
ஆறொன்றுமில்லை, / மற்றச்சரணன்றி *// என்று இப்பொருளைத்–
தேறுமவர்க்கும் எனக்கும் உனைத்தந்த செம்மை சொல்லால்/
கூறும்பரமன்று * இராமானுச! மெய்ம்மை கூறிடிலே. 45

கூறும் சமயங்களாறும் குலைய * குவலயத்தே–
மாறன் பணித்த / மறையுணர்ந்தோனை *// மதியிலியேன்–
தேறும்படி என்மனம் புகுந்தானைத், / திசையனைத்தும்–
ஏறும்குணனை * இராமானுசனை இறைஞ்சினமே. 46

இறைஞ்சப்படும் பரன்ஈசன் அரங்கனென்று * இவ்வுலகத்து–
அறம்செப்பும் / அண்ணல் இராமானுசன் *// என்னருவினையின்–
திறம்செற்று இரவும் பகலும் விடாது என்தன் சிந்தையுள்ளே/
நிறைந்தொப்பறவிருந்தான் * எனக்கு ஆரும் நிகரில்லையே! 47

நிகரின்றி நின்ற என் நீசதைக்கு * நின்னருளின்கணன்றிப்–
புகலொன்றுமில்லை / அருட்கும் அஃதேபுகல் *// புன்மையிலோர்–
பகரும் பெருமை இராமானுச! / இனிநாம்பழுதே
அகலும் பொருளென்? * பயன் இருவோமுக்குமானபின்னே? 48

ஆனது செம்மையறநெறி * பொய்ம்மை யறுசமயம்–
போனது பொன்றி, / இறந்தது வெங்கலி *// பூங்கமலத்–
தேனதி பாய்வயல் தென்னரங்கன் கழல் சென்னி வைத்துத்–/
தானதில் மன்னும் * இராமானுசன் இத்தலத்துதித்தே. 49

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

** உதிப்பன உத்தமர் சிந்தையுள் * ஒன்னலர் நெஞ்சம் அஞ்சிக்–
கொதித்திட,/ மாறிநடப்பன *// கொள்ளைவன் குற்றமெல்லாம்–
பதித்த என் புன் கவிப்பாவினம் பூண்டன பாவு தொல்சீர்/
எதித் தலைநாதன் * இராமானுசன் தன் இணையடியே. (2) 50

அடியைத் தொடர்ந்தெழும் ஐவர்கட்காய் *அன்று பாரதப்போர்–
முடியப், / பரிநெடுந்தேர் விடுங்கோனை *// முழுதுணர்ந்த–
அடியர்க்கமுதம் இராமானுசன் / என்னையாள வந்து இப்–
படியில் பிறந்தது * மற்றில்லை காரணம் பார்த்திடிலே. 51

பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப * இப்பார் முழுதும்–
போர்த்தான் புகழ்கொண்டு, / புன்மையினேனிடைத்தான் புகுந்து *//
தீர்த்தான் இருவினை தீர்த்து, அரங்கன்செய்ய / தாளிணையோடு–
ஆர்த்தான் * இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே. 52

அற்புதன் செம்மையிராமானுசன் * என்னையாளவந்த–
கற்பகம் / கற்றவர் காமுறுசீலன் *// கருதரிய–
பற்பல்லுயிர்களும் பல்லுலகுயாவும் பரனதென்னும்–/
நற்பொருள் தன்னை * இந் நானிலத்தே வந்துநாட்டினனே. 53

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன * நாரணனைக்–
காட்டியவேதம் களிப்புற்றது *// தென் குருகை வள்ளல்–
வாட்டமிலா வண்தமிழ்மறை வாழ்ந்தது,/ மண்ணுலகில்–
ஈட்டிய சீலத்து * இராமானுசன் தனியல்வு கண்டே. 54

கண்டவர்ச் சிந்தை கவரும் * கடிபொழில் தென்னரங்கன்–
தொண்டர்க்குலாவும் இராமானுசனைத் *// தொகையிறந்த–
பண்தருவேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்–/
கொண்டலை மேவித்தொழும் * குடியாமெங்கள் கோக்குலமே 55

கோக்குல மன்னரை மூவெழுகால் * ஒரு கூர்மழுவால்–
போக்கிய தேவனைப் / போற்றும் புனிதன் *// புவனமெங்கும்–
ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்தபின்,/ என்–
வாக்குரையாது * என் மனம்நினையாது இனி மற்றொன்றையே. 56

மற்றொரு பேறுமதியாது * அரங்கன் மலரடிகு ஆள்–
உற்றவரே,/ தனக்கு உற்றவராய்க் கொள்ளும் உத்தமனை *//
நற்றவர் போற்றும் இராமானுசனை, / இந் நானிலத்தே–
பெற்றனன் * பெற்றபின் மற்றறியேன் ஒரு பேதைமையே. 57

பேதையர் வேதப் பொருளிதென்று உன்னிப் * பிரமம் நன்றென்று–
ஓதி / மற்றெல்லாவுயிரும் அஃதென்று *// உயிர்கள் மெய்விட்டு–
ஆதிப் பரனோடொன்றாமென்று சொல்லுமவ்வல்லலெல்லாம்/
வாதில் வென்றான் * எம் இராமானுசன் மெய்ம் மதிக்கடலே. 58

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

கடலளவாய திசை யெட்டினுள்ளும் * கலியிருளே–
மிடை தருகாலத்து இராமானுசன் *// மிக்க நான்மறையின்–
சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல்/ உயிரை–
உடையவன் * நாரணன் என்றறிவாரில்லை உற்றுணர்ந்தே. 59

உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் * திருவாய்மொழியின்–
மணந்தரும், / இன்னிசை மன்னுமிடந்தொறும் *// மாமலராள்–
புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்குநிற்கும்–/
குணந்திகழ் கொண்டல் * இராமானுசன் எங்குலக் கொழுந்தே. 60

கொழுந்து விட்டோடிப் படரும் வெங்கோள்வினையால் * நிரயத்து–
அழுந்தியிட்டேனை / வந்தாட்கொண்ட பின்னும் *// அருமுனிவர்–
தொழுந்தவத்தோன் எம் இராமானுசன் / தொல்புகழ், சுடர்மிக்–
கெழுந்தது * அத்தால் நல்லதிசயங்கண்டது இருநிலமே. 61

இருந்தேன் இருவினைப் பாசம்கழற்றி * இன்றுயான் இறையும்–
வருந்தேன் / இனி எம் இராமானுசன் *// மன்னு மாமலர்த்தாள்–
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கு ஒன்றும் நன்மைசெய்யாப்/
பொருந் தேவரைப் பரவும் * பெரியோர் தங்கழல் பிடித்தே. 62

பிடியைத் தொடரும் களிறென்ன * யான் உன் பிறங்கியசீர்–
அடியைத் தொடரும்படி/ நல்கவேண்டும் *// அறுசமயச்–
செடியைத் தொடரும் மருள்செறிந்தோர் சிதைந்தோட வந்து,/ இப்–
படியைத் தொடரும் * இராமானுச! மிக்க பண்டிதனே! 63

பண்தரு மாறன் பசுந்தமிழ் * ஆனந்தம் பாய்மதமாய்–
விண்டிட / எங்கள், இராமானுச முனிவேழம் *// மெய்ம்மை–
கொண்ட நல்வேதக் கொழுந்தண்டமேந்திக், குவலயத்தே–/
மண்டி வந்தேன்றது * வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே. 64

வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு * என்றும் மறையவர்தம்–
தாழ்வற்றது / தவம் தாரணிபெற்றது *// தத்துவநூல்–
கூழற்றது குற்றமெல்லாம் பதித்த குணத்தினர்க்கு,/ அந்–
நாழற்றது * நம் இராமானுசன் தந்த ஞானத்திலே. 65

ஞானம் கனிந்த நலங்கொண்டு * நாள்தொறும் நைபவர்க்கு–
வானம் கொடுப்பது மாதவன் *// வல்வினையேன் மனத்தில்–
ஈனம்கடிந்த இராமானுசன் / தன்னை எய்தினர்க்கு, அத்–
தானம் கொடுப்பது * தன்தகவென்னும் சரண் கொடுத்தே. 66

சரணமடைந்த தருமனுக்கா * பண்டு நூற்று வரை–
மரண மடைவித்த மாயவன் // தன்னை வணங்க வைத்த–
கரணமிவை உமக்கன்றென்று இராமானுசன்,/ உயிர்கட்கு–
அரணங்கமைத்திலனேல் * அரணார் மற்றிவ்வாருயிர்க்கே? 67

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

ஆரெனக்கின்று நிகர்ச்சொல்லில்? * மாயன் அன்று ஐவர்த்தெய்வத்–
தேரினில் செப்பிய / கீதையின் செம்மை *// பொருள் தெரியப்–
பாரினில் சொன்ன இராமானுசனைப் பணியும் நல்லோர்/
சீரினில் சென்று பணிந்தது * என் ஆவியும் சிந்தையுமே. 68

சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து * முன்னாள்–
அந்தமுற்றாழ்ந்தது கண்டு *// அவையென்தனக்கன்றருளால்–
தந்த அரங்கனும் தன்சரண் தந்திலன்,// தானதுதந்து */
எந்தை இராமானுசன் வந்தெடுத்தனன் இன்று என்னையே. 69

என்னையும் பார்த்து என்னியல்வையும் பார்த்து * எண்ணில் பல்குணத்த–
உன்னையும் பார்க்கில் / அருள்செய்வதேநலம் *// அன்றி என்பால்–
பின்னையும் பார்க்கில் நலமுளதே? / உன் பெருங்கருணை,
தன்னை யென்பார்ப்பர்? * இராமானுச! உன்னைச் சார்ந்தவரே. 70

சார்ந்தது என் சிந்தை உன்தாளிணைக் கீழ் * அன்புதான் மிகவும்–
கூர்ந்தது, /அத்தாமரைத் தாள்களுக்கு *// உன்தன் குணங்களுக்கே–
தீர்ந்தது என் செய்கை முன் செய்வினை / நீ செய்வினை, அதனால்–
பேர்ந்தது * வண்மை இராமானுச! எம்பெருந்தகையே. 71

கைத்தனன் தீயசமயக் கலகரை * காசினிக்கே–
உய்த்தனன்,/ தூய மறை நெறி தன்னை *// என்று உன்னி உள்ளம்–
நெய்த்தவன் போடிருந்தேத்தும் நிறை புகழோருடனே/
வைத்தனன் என்னை * இராமானுசன் மிக்க வண்மை செய்தே. 72

வண்மையினாலும் தன் மாதகவாலும் * மதிபுரையும்–
தண்மையினாலும் / இத்தாரணியோர் கட்கு *// தான் சரணாய்–
உண்மை நல் ஞானமுரைத்த இராமானுசனை, உன்னும்–/
திண்மையல்லால் எனக்கில்லை * மற்றோர் நிலை தேர்ந்திடிலே. 73

தேரார் மறையிந்திறமென்று * மாயவந்தீயவரைக்–
கூராழி கொண்டு குறைப்பது *// கொண்டலனையவண்மை–
ஏரார்க்குணத்தெம்மிராமானுசன், / அவ்வெழில் மறையில்–
சேராதவரைச் சிதைப்பது * அப்போது ஒரு சிந்தை செய்தே. 74

செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்–
கைத்தலத்தாழியும் / சங்கமும் ஏந்தி *// நங்கண் முகப்பே–
மெய்த்தலைத்து உன்னை விடேனென்றிருக்கிலும், நின்புகழே–/
மொய்த்தலைக்கும் வந்து * இராமானுச! என்னை முற்றும் நின்றே. 75

** நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் * நிறை வேங்கடப் பொற்–
குன்றமும்,/ வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும் *//
உன்தனக்கு எத்தனை இன்பந்தரும் உன் இணை மலர்த்தாள்/
என் தனக்கும் அது * இராமானுச! இவையீந்தருளே. (2) 76

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

ஈந்தனன் ஈயாத இன்னருள் * எண்ணில் மறைக்குறும்பைப்–
பாய்ந்தனன்,/ அம்மறைப் பல்பொருளால் *// இப்படியனைத்தும்–
ஏய்ந்தனன் கீர்த்தியினால் என்வினைகளை, / வேர்ப்பறியக்–
காய்ந்தனன் * வண்மை இராமானுசற்கு என் கருத்தினியே? 77

கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றிக் * கருதரிய–
வருத்தத்தினால் / மிகவஞ்சித்து *// நீ இந்த மண்ணகத்தே–
திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கியபின், / என்நெஞ்சில்–
பொருத்தப்படாது * எம் இராமானுச! மற்றோர்ப் பொய்பொருளே. 78

பொய்யைச் சுரக்கும் பொருளைத் துறந்து * இந்தப்பூதலத்தே–
மெய்மைப்புரக்கும் / இராமானுசன் நிற்க *// வேறு நம்மை–
உய்யக்கொளவல்ல தெய்வம் இங்குயாதென்று உலர்ந்து அவமே /
ஐயப்படாநிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. 79

நல்லார்ப்பரவும் இராமானுசன் * திருநாமம்நம்ப–
வல்லார்த திறத்தை, / மறவாதவர்கள் யவர் *// அவர்க்கே–
எல்லாவிடத்திலும் என்றும் எப்போதிலும் எத்தெழும்பும், /
சொல்லால் மனத்தால் * கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே. 80

சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ்த் * தொண்டு பட்டவர்பால்–
சார்வின்றி நின்ற எனக்கு *// அரங்கன் செய்ய தாளிணைகள்–
பேர்வின்றியின்று பெறுத்தும் இராமானுச!/ இனி உன்–
சீரொன்றிய கருணைக்கு * இல்லை மாறு தெரிவுறிலே. 81

தெரிவுற்ற ஞானம் செறியப் பெறாது * வெந் தீவினையால்–
உருவற்ற ஞானத்து உழல்கின்ற என்னை *// ஒருபொழுதில்–
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான் என்ன புண்ணியனோ?/
தெரிவுற்ற கீர்த்தி * இராமானுசனென்னும் சீர்முகிலே. 82

சீர்கொண்டு பேரறம் செய்து * நல்வீடு செறிதுமென்னும்,
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் *// உன் பதயுகமாம்–
ஏர்கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன்,/ உன்னுடைய–
கார்கொண்ட வண்மை * இராமானுச! இது கண்டுகொள்ளே. 83

கண்டு கொண்டேன் எம் இராமானுசன் தன்னை * காண்டலுமே–
தொண்டு கொண்டேன்,/அவன் தொண்டர் பொற்றாளில்*//என்தொல்லை
வெந்நோய் விண்டு கொண்டேன் அவன் சீர் வெள்ளவாரியை,/ வாய்மடுத்து இன்று
உண்டு கொண்டேன் * இன்னம் உற்றனவோதில் உவப்பில்லையே. 84

ஓதிய வேதத்தின் உட்பொருளாய் * அதன் உச்சிமிக்க–
சோதியை, / நாதனென அறியாது உழல்கின்ற தொண்டர் *//
பேதைமை தீர்த்த இராமானுசனைத் தொழும் பெரியோர்/
பாதமல்லால் என்தன் ஆருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையை. 85

பற்றா மனிசரைப் பற்றி * அப்பற்றுவிடாதவரே–
உற்றாரென உழன்று / ஓடினையேன் இனி *// ஒள்ளியநூல்–
கற்றார் பரவும் இராமானுசனைக், / கருதுமுள்ளம்–
பெற்றார் யவர் * அவர் எம்மை நின்றாளும் பெரியவரே. 86

பெரியவர்ப் பேசிலும் பேதையர்ப் பேசிலும் * தன் குணங்கட்கு–
உரிய சொலென்றும், / உடையவனென்றென்று *// உணர்வின் மிக்கோர்–
தெரியும் வண் கீர்த்தி இராமானுசன், / மறை தேர்ந்து உலகில்–
புரியும் நல் ஞானம் * பொருந்தாதவரைப் பொரும் கலியே. 87

கலி மிக்க செந்நெல் கழனிக்குறையல் * கலைப் பெருமான்–
ஒலிமிக்க பாடலை உண்டு, / தன்னுள்ளம் தடித்து *// அதனால்–
வலிமிக்க சீயம் இராமானுசன் / மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே. 88

போற்றரும் சீலத்து இராமானுச! * நின்புகழ் தெரிந்து–
சாற்றுவனேல் / அது தாழ்வு அதுதீரில் *// உன் சீர்தனக்கு ஓர்–
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும், / என்மனம் ஏத்தியன்றி–
ஆற்றகில்லாது * இதற்கு என்னினை வாயென்றிட்டு அஞ்சுவனே. 89

நினையார்ப் பிறவியை நீக்கும் பிரானை * இந் நீள்நிலத்தே–
எனை யாளவந்த / இராமானுசனை *// இருங்கவிகள்–
புனையார் புனையும் பெரியவர்த் தாள்களில், / பூந்தொடையல்–
வனையார் * பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே. 90

மருள் சுரந்து ஆகம வாதியர் கூறும் * அவப் பொருளாம்–
இருள் சுரந்தெய்த்த, / உலகிருள் நீங்கத் *// தன்னீண்டியசீர்–
அருள் சுரந்து எல்லாவுயிர்கட்கும் நாதன், / அரங்கனென்னும்–
பொருள் சுரந்தான் * எம் இராமானுசன் மிக்க புண்ணியனே. 91

புண்ணிய நோன்பு புரிந்துமிலேன் * அடி போற்றி செய்யும்–
நுண்ணருங் கேள்வி, நுவன்றுமிலேன் *// செம்மை நூற்புலவர்க்கு–
எண்ணருங் கீர்த்தி, இராமானுச! / இன்று நீ புகுந்து, என்–
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்ற இக்காரணம் கட்டுரையே. 92

கட்டப் பொருளை மறைப் பொருளென்று * கயவர் சொல்லும்–
பெட்டைக் கெடுக்கும் பிரானல்லனே? *// என் பெருவினையைக்–
கிட்டிக் கிழங்கொடு தன்னருளென்னு மொள்வாளுருவி– /
வெட்டிக் கிளைந்த * இராமானுசனென்னும் மெய்த்தவனே. 93

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

தவந்தரும் செல்வம் தகவும் தரும் * சலியாப்பிறவிப்–
பவம் தரும், / தீவினைபாற்றித் தரும் *// பரந்தாமமென்னும்–
திவந்தரும் தீதில் இராமானுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு, /
உவந்தருந்தேன் * அவன் சீரன்றியான் ஒன்றும் உள் மகிழ்ந்தே. 94

உண்ணின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து * அவர்க்கு உயவே–
பண்ணும் பரனும் / பரிவிலனாம்படி *// பல்லுயிர்க்கும்–
விண்ணின் தலைநின்று வீடளிப்பான் எம் இராமானுசன்– /
மண்ணின் தலத்து உதித்து * உய்மறை நாலும் வளர்த்தனனே. 95

வளரும்பிணி கொண்ட வல் வினையால் * மிக்க நல்வினையில்–
கிளரும் துணிவு கிடைத்தறியாது *// முடைத்தலையூன்–
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனி திரிவேற்கு, /
உளர்எம் இறைவர் * இராமானுசன் தன்னை உற்றவரே. 96

தன்னை உற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னுதாமரைத்தாள்–
தன்னை உற்றாட்செய்ய, / என்னையுற்றான் இன்று *// தன்தகவால்–
தன்னை உற்றாரன்றித் தன்மையுற்றாரில்லை என்றறிந்து, /
தன்னை உற்றாரை * இராமானுசன் குணம் சாற்றிடுமே. 97

** இடுமே இனிய சுவர்க்கத்தில்? * இன்னும் நரகிலிட்டுச்–
சுடுமே? / அவற்றைத் தொடர்தரு தொல்லை *// சுழல்பிறப்பில்–
நடுமே? இனிநம் இராமானுசன் / நம்மை நம்வசத்தே
விடுமே? சரணமென்றால் * மனமே! நையல் மேவுதற்கே? (2) 98

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்–
சொற்கற்றசோம்பரும், / சூனியவாதரும் *// நான்மறையும்–
நிற்கக் குறும்புசெய்நீசரும் மாண்டனர், நீள்நிலத்தே– /
பொற்கற்பகம் * எம்இராமானுசமுனிபோந்தபின்னே. 99

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு * உனதடிப்போதில் ஒண்சீர்–
ஆந்தெளிதேனுண்டு / அமர்ந்திட வேண்டி *// நின்பாலதுவே–
ஈந்திடவேண்டும் இராமானுச! / இதுவன்றி ஒன்றும்,
மாந்தகில்லாது * இனிமற்றொன்று காட்டி மயக்கிடலே. 100

மயக்கும் இருவினை வல்லியில்பூண்டு * மதிமயங்கித்–
துயக்கும்பிறவியில், / தோன்றிய என்னை *// துயரகற்றி–
உயக்கொண்டு நல்கும் இராமானுச! / என்றது உன்னையுன்னி,
நயக்கும்அவர்க்கு இது இழுக்கென்பர் * நல்லவரென்று நைந்தே. 101

நையும் மனமும் உன் குணங்களையுன்னி * என்நாஇருந்து எம்–
ஐயன் / இராமானுசன், என்றழைக்கும் *// அருவினையேன்–
கையும்தொழும் கண்கருதிடும் காணக்கடல் புடைசூழ்/
வையமிதனில் * உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே? 102

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

வளர்ந்த வெங்கோபமடங்கலொன்றாய் * அன்று வாளவுணன்–
கிளர்ந்த, / பொன்னாகம் கிழித்தவன் *// கீர்த்திப் பயிரெழுந்து–
விளைந்திடும் சிந்தை இராமானுசன் / என் தன் மெய்வினை நோய்
களைந்துநன்ஞானமளித்தனன் * கையில் கனியென்னவே. 103

கையில் கனியென்னக், கண்ணனைக்காட்டித் தரிலும் * உன்தன்–
மெய்யில் பிறங்கிய,/ சீரன்றி வேண்டிலன் யான் *// நிரயத்–
தொய்யில் கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள் நீ/
செய்யில் தரிப்பன் * இராமானுச! என் செழுங்கொண்டலே! 104

செழுந்திரைப் பாற்கடல் / கண்துயில்மாயன் * திருவடிக்கீழ்–
விழுந்திருப்பார் நெஞ்சில்,/ மேவுநன்ஞானி *// நல்வேதியர்கள்–
தொழும் திருப்பாதனிராமானுசனைத் தொழும் பெரியோர்/
எழுந்திரைத்தாடும் இடம் * அடியேனுக்கு இருப்பிடமே. 105

(சாற்றுமறை)
** இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலை யென்னும்–
பொருப்பிடம், / மாயனுக்கென்பர் நல்லோர் *// அவை தம்மொடும் வந்து–
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து, / இன்று அவன் வந்து–
இருப்பிடம் * என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே. (2) 106

(சாற்றுமறை)
** இன்புற்ற சீலத்தி இராமானுச! * என்றும் எவ்விடத்தும்–
என்புற்றநோய், / உடல்தோறும் பிறந்து இறந்து *// எண்ணரிய–
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டு, / உன் தொண்டர்கட்கே–
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கி அங்காட்படுத்தே. (2) 107

(சாற்றுமறை)
** அங்கயல்பாய் வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்–
பங்கயமாமலர்ப், / பாவையைப் போற்றுதும் *// பத்தியெல்லாம்–
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சே! நம்தலைமிசையே/
பொங்கிய கீர்த்தி * இராமானுசனடிப்பூமன்னவே. (2) 108

(சாற்றுமறை)
[பூமன்னுமாது பொருந்திய மார்பன் * புகழ்மலிந்த–
பாமன்னு மாறன்,/ அடி பணிந்துய்ந்தவன் *// பல்கலையோர்–
தாம் மன்ன வந்த இராமானுசன்,/ சரணாரவிந்தம்–
நாம் மன்னிவாழ * நெஞ்சே!சொல்லுவோம் அவன் நாமங்களே.]

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org